# தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்
# Tamil Study Centre, Homebush



## 34ஆவது ஆண்டு பரிசளிப்பு விழா மலர்

11.12.2021



# தமிழ் மொழி வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ் மொழி
வாழிய வாழியவே
வான மளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழியவே
ஏழ்கடல் வைப்பினும் தன்மணம் வீசி
இசை கொண்டு வாழியவே
எங்கள் தமிழ் மொழி எங்கள் தமிழ் மொழி
என்றென்றும் வாழியவே
சூழ்கலி நீங்கத் தமிழ் மொழி ஓங்கத்
துலங்குக வையகமே
தொல்லை வினைதரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ் நாடே
வாழ்க தமிழ் மொழி வாழ்க தமிழ் மொழி
வாழ்க தமிழ் மொழியே
வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழியவே

# கல்லூரிக் கீதம்

தமிழ்மொழிக் கல்வி தரும் ஹோம்புஷ்
தமிழ்க் கல்வி நிலையம் வாழ்க
அமிழ்தினும் இனிய அருமை மொழியை
அகிலத்தில் பரப்பியே வாழ்க
(தமிழ்மொழிக்)

கண்ணாக கல்வியையும் கலையையும் கருதும்
கலங்கரை விளக்கமாய் வாழ்க
தென் துருவத் தேசமாம் அவுஸ்திரேலியாவில்
தேமதுரத் தமிழோசை பரப்பியே வாழ்க
(தமிழ்மொழிக்)

அழகான சிட்னி மாநகர் உதித்தே
ஆல் போல் தழைத்தே வளர்க
அன்பான எங்கள் ஆண்டவன் அருளினால்
எம் கல்வி நிலையம் வாழ்க!
(தமிழ்மொழிக்)

வாழ்க வாழ்கவே! தமிழ் வாழ்க வாழ்கவே!!

(இயற்றியவர்: திரு ச. தேவராசா)



**AUSTRALIAN NATIONAL ANTHEM**

Australians all let us rejoice,
For we are young and free;
We've golden soil and wealth for toil;
Our home is girt by sea;
Our land abounds in nature's gifts
Of beauty rich and rare;
In history's page, let every stage
Advance Australia Fair.
In joyful strains then let us sing,
Advance Australia Fair.

Beneath our radiant Southern Cross
We'll toil with hearts and hands;
To make this Commonwealth of ours
Renowned of all the lands;
For those who've come across the seas
We've boundless plains to share;
With courage let us all combine
To Advance Australia Fair.
In joyful strains then let us sing,
Advance Australia Fair.

# நிகழ்ச்சி நிரல்

தமிழ் மொழி வாழ்த்து

கல்லூரி கீதம் / தேசிய கீதம்

நத்தார் பண்டிகை

நற்சிந்தனை: வணபிதா டில்ருக்ஷன் ஜோசப்

நத்தார் இன்னிசைக் கீதங்கள்

பயிற்சி: ஆசிரியர் திருமதி தேவரதி குலராஜா

பங்குபற்றும் மாணவர்கள்

| | | |
|---|---|---|
| சஷ்வித் சுவாதிஷ் | விசாகன் சுரேந்திரன் | பிரகாஷ் விஜயகுமார் |
| அஸ்வின் ராஜ்குமார | லவங்கி பகீரதன் | விவேகா கோணேஸ்வரன் |
| பூர்ணிஷா சூரியகுமார் | தனிகா திருவழகன் | திவாசினி சிவராசா |
| லாரண்யா ராகவன் | அக்ஷயா ராஜ்குமார | நேஹா சிவரூபன் |
| ஸ்ரீஷா கிஷோக்குமார் | தேஷினி கேதீஸ்வரன் | |

பக்கவாத்தியம் இசைப்போர்

| வயலின் | Keyboard | மிருதங்கம் |
|---|---|---|
| அரன் தேவபாலன் | ஜனனி குலராஜா | ஜனார்த்தனன் குமரகுருபரன் |

வருடாந்த பரிசளிப்பு வைபவம்

தலைவர் உரை:
திரு சாலை மணிமுடியன் மெய்வழி சிங்காரவேல் அனந்தர்

அதிபர் உரை:
திருமதி செல்வநாயகி சிவசுப்ரமணியம்

பாலரர் முன் பள்ளி மழலை பட்டதாரிகளின் கலை நிகழ்ச்சி

விசேட விருந்தினர் உரை:
Hon Jodi McKay MP
நியு சவுத் வேல்ஸ் பாராளுமன்ற உறுப்பினர்

Hon Dr Fiona Martin MP
ஆஸ்திரேலியா பாராளுமன்ற உறுப்பினர்

புத்தகப்பைகள் (TSCH School bags) வழங்கல்
தமிழ் அகராதிகள் (Tamil Dictionary) வழங்கல்

ஆசிரியர்களைக் கௌரவித்தல்

HSC பரீட்சையில் தோற்றிய
உயர்தரவகுப்பு மாணவர்களை கௌரவித்தல்

மாணவர்களுக்கான பரிசளிப்பு

நன்றியுரை:
திரு கிருஷ்ணகுமார் சந்திரசேனன்

நத்தார் தாத்தாவின் வருகையும் பரிசுகள் வழங்கலும்

மாணவர்களுக்கு சிற்றுண்டி வழங்குதல்

நிகழ்ச்சி நிறைவு



# தலைவர் அறிக்கை

அனைவருக்கும் வணக்கம்,

ஷோம்புஷ் தமிழ்க் கல்வி நிலையத்தின் 2021ஆம் ஆண்டின் செயற்பாட்டு அறிக்கையை இன்றைய வருடாந்தப் பரிசளிப்பு விழாவில் சமர்ப்பிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

## அதிபர், உப அதிபர்கள் நியமனம்

கல்விநிலையத்தின் அதிபராக திருமதி செல்வநாயகி சிவசுப்பிரமணியம் அவர்கள் தொடர்ந்து மூன்றாவது ஆண்டும் பணியாற்ற நிர்வாகக்குழுவினால் நியமிக்கப்பட்டார். உப அதிபர்களாக திருமதி கனகேஸ்வரி வடிவேல்பிள்ளை (கீழ் வகுப்பு) திருமதி தேவரதி குலராஜா (இடை நிலை வகுப்பு), திருமதி புவனேஸ்வரி புருஷோத்தமர் (மேல் வகுப்பு), திருமதி கிருஷ்ணகுமாரி நடராஜா (HSC) ஆகியோர் நியமிக்கப்பட்டு அவர்தம் சேவைகளைச் செவ்வனே ஆற்றிவருகின்றனர். இவர்களுக்கு எமது பாராட்டுகள்.

## மாணவர் சபை

இவ்வருடத்திற்கான மாணவர் சபைத் தலைவர்களாக மேற்பிரிவிற்கு சஞ்சய் ரகுநாதன், அக்ஷிதா ஸ்ரீகாந்தா ஆகியோரும் கீழ்பிரிவிற்கு அஜய் ரமணன், கீத்திகா பாலகிருஷ்ணன் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டார்கள். பொறுப்பாசிரியர்களாக மேற்பிரிவிற்கு திருமதி சத்தியதேவி பாலகங்காதரன் அவர்களும் கீழ்ப்பிரிவிற்கு திருமதி நிர்மலா தயாளன் அவர்களும் ஆசிரியர் குழுவால் தெரிவு செய்யப்பட்டு நிர்வாகக் குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்டனர். பாடசாலை விழாக்களின் போது மாணவர் சபை அங்கத்தவர்கள் சிறப்பாகப் பணிபுரிந்தார்கள். அவர்களுக்கும், அவர்களை வழிநடத்திய ஆசிரியர்களுக்கும் எமது பாராட்டுகள்.

## பாடற்குழு

இவ்வருடம் பாடற்குழுத் தலைவியாக அம்பிகா அசோகபாலன் தெரிவு செய்யப்பட்டார். இக்குழுவிற்குப் பொறுப்பாசிரியர்களாக திருமதி மாலினி சோமஸ்கந்தன் (மேற்பிரிவு) திருமதி காலாவதி விக்னேஸ்வரன் (கீழ்ப்பிரிவு) ஆசிரியர் குழுவால் தெரிவு செய்யப்பட்டு நிர்வாகக் குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்டனர்.

பாடற்குழு மாணவர்களுக்கும், அவர்களை வழிநடத்திய ஆசிரியர்களுக்கும் எமது பாராட்டுகள்.

## 2021ஆம் ஆண்டின் புதிய திட்டங்கள்:

“தன்னேர் இலாத தமிழ்” என்று தமிழ் மொழியைப் போற்றிப் புகழ்கிறது தண்டியலங்காரச் செய்யுள்.
“இருந்தமிழே உன்னால் இருந்தேன் - இமையோர்
விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்”
என்று கூறுகிறார் “தமிழ் விடு தூது” பாடிய புலவர்.
“இனிமையும் நீர்மையும் தமிழ் எனலாகும்” என்கிறது பிங்கல நிகண்டு.

இவ்வாறு ஒப்பற்ற மொழியாக விளங்குகிறது தமிழ் மொழி. தமிழ் என்னும் சொல்லின் பொருள் இனிமை என்பதாகும் - அத்தகைய சிறப்புப் பெற்ற இனிமையான தமிழை இத்தரணியில் சற்றுச் செழுமை பெற்றிடவெண்ணி நாம் பல்வேறு செயற்திட்டங்களை எமது காலத்தில் முன்னெடுத்துள்ளோம். அவற்றுள் மிகமுக்கியமானது எம் பாடசாலையில் மாணவர் ஒருங்கமைப்பு முகாமைத்துவ திட்டமிடல் வலைத்தளங்களும் அதன் செயற்பாடுகளுமாகும் Students Management System. இதனூடாக இலகுமுறையில் மாணவர்கள் தரவுகளைச் சீரமைத்து சேமித்து வைப்பதுடன் இலகுமுறையில் செயற்பாடுகளுக்கும் வழிவகுக்குகிறது என்றால் அது மிகையல்ல.

இச்செயற்த்திட்டமானது இனிவருங்காலங்களில் எம் ஹோம்புஷ் தமிழ்ப் பாடசாலையை நவீன தொழில்நுட்பமுறையில் வழிநடத்த உறுதுணைபுரியவல்லது. இத்திட்டத்திற்காண தயாரிப்புச் செலவு $15,400.00 ஆகும். இத்திட்டத்தை பராமரிக்க முதல் வருடத்திற்கு $1,056.00, இரண்டாம் வருடத்திற்கு $1,161.60 மற்றும் மூன்றாம் வருடத்திற்கு $1,277.76 செலவாகுமென ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

அதுமட்டுமா, எமக்குக் கிடைக்கப்பெற்ற மேலதிக கொடுப்பனவுகளின் துணைகொண்டு எம் பாடசாலையின் பெயர்பொறிக்கப்பட்ட மாணவர்களுக்கான புத்தகப்பைகள் TSCH School bags கொள்முதல் செய்துள்ளதுடன், அவற்றினை எம் பாடசாலையின் மாணவ மாணவிகளுக்கு முற்றிலும் இலவசமாக வினியோகிப்பதற்கும் நாம் முடிவுசெய்துள்ளோம். எமது காலகட்டத்தின் ஒரு மிகவும் சிறந்த செயற்திட்டமாக இதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அத்துடன் மட்டும் நாம் நின்றுவிடவில்லை, தமிழ், தமிழ் எழுத்துக்கள், தமிழ் இலக்கணம், தமிழர் பண்பாடு, தமிழ் கலாச்சாரம், தமிழ் பாரம்பரியம், தமிழர் கதைகள், தமிழில் உள்ள பொதுவான கதைகள், இலக்கிய நாடகங்கள், தமிழ் அகராதிகள், இன்சுவை மிக்க தமிழின் வேறுபல சிறப்பம்சங்களை கொண்ட பலநூறு நூல்களையும் நாம் கொள்முதல் செய்துள்ளோம். அவற்றினை எமது மாணவர்களுக்கு அவரவர் வகுப்பாசிரியர்களின் பரிந்துரைகளுக்கமைய அவர்களின் மேலாண்மை மிக்க அனுபவத்திறனினால் தெரிவுசெய்யப்பட்ட இத்தகைய நூல்களை இலவசமாக நமது பாடசாலை நூலகம் வாயிலாக வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைறோம். இதுவும் நமது கடந்த ஒரு வருட காலத்தில் நம் செய்த மிகச் சிறந்த செயற்திட்டமாக நாம் கருதுகிறோம்.

மேலும், மாணவ மாணவிகளுக்கான கலாச்சார உடைகள் கொள்முதல் செய்யப்பட்டது.

## பாடசாலைக்கு கிடைத்த மானியங்கள்

இவ்வருடம் அரசாங்கம் பாடசாலைக்கு Per Capita Grantக்காக $28,590 ஐயும் Multicultural Grantக்காக $29,084 ஐயும் வழங்கியுள்ளது. இம் மானியங்களைப் பெறுவதற்கு வேண்டிய தகவல்களைச் சேகரித்து விண்ணப்பிப்பதற்கு உதவிய சிறப்புத் திட்ட ஒருங்கிணைப்பாளர் திரு பாரதி கெங்காதரன் அவர்களுக்கு நன்றிகளைத் தெரிவுத்துக்கொள்கிறோம்.

## சமூக மொழிப் பாடசாலைகளின் Compliance Pilot Programme

இவ்வருடம் நியூ சவுத் வேல்ஸ் மாநில சமூக மொழிப் பாடசாலைகளின் கூட்டமைப்பினால் (NSWFCLS) நடாத்தப்பட்ட Compliance Pilot Programme இற்கு தெரிவு செய்யப்பட்ட 30 சமூக மொழிப் பாடசாலைகளில் எமது பாடசாலையும் ஒன்றாகும் என்பதைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். இக்கூட்டமைப்பு பாடசாலையின் பல்வேறு துறைகளில் சாத்தியமான மற்றும் தேவைப்படும் இடங்களில் உதவிகளை வழங்கி இந்த Pilot திட்டத்தை வெற்றிகரமாக முடித்து iPad ஒன்றையும் பாடசாலைக்குத் வழங்கி உள்ளது.

## NSWFCLS Annual Gala Dinner 2021

நியூ சவுத் வேல்ஸ் மாநில சமூக மொழிப் பாடசாலைகளின் கூட்டமைப்பினால் நடாத்தப்பட்ட வருடாந்திர இரவு விருந்து 2021 இல் ஹோம்புஷ் தமிழ் பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் நிர்வாக குழு உறுப்பினர்கள் கலந்துகொண்டு தமது ஆதரவை நல்கினர்.

## பாடசாலையில் தொழில்நுட்ப வசதிகளுடன் தமிழ் கற்பித்தல்

எமது நிர்வாகக்குழு நவீன தொழில்நுட்ப வசதிகள், உபகரணங்கள் (iPad, Android tablets and smart board) துணைகொண்டு தமிழ் கற்பித்தலில் முனைப்புடன் ஈடுபட்டுவருகிறது.

இந்த தொழில்நுட்பத் திட்டத்திற்காக 6 iPads, 6 Apple TV Boxes, 2 Laptops போன்ற IT உபகரணங்கள் $12,795இக்கு கொள்வனவு செய்யப்படுள்ளன என்பதையும் இத்தருணத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறோம்.

பாடசாலை Zoom இணையவழியினூடாக நடத்த 3 Licenses கொள்வனவு செய்யப்படுள்ளன என்பதையும் இத்தருணத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறோம்.

## 34ஆவது ஆண்டு நிறைவுக் கலை விழா & வாணி விழா:

நாட்டின் அசாதாரண சூழ்நிலை காரணமாக இவ்வருடம் நடாத்த இயலாமைக்கு வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்

## சிறந்த மாணவர்கள் தெரிவும் விருதுகளும்

2020ம் ஆண்டுக்கான சிறந்த மாணவர்களாக அக்ஷயா ராஜ்குமார் கீழ்ப்பிரிவிலும் பானுகா கனகசபேசன் மேற்பிரிவிலும் தெரிவு செய்யப்பட்டார்கள். இரண்டாம் நிலையில் கீழ்ப்பிரிவில் விஷாகன் சுரேந்திரன் மேற்பிரிவில் ஜெகதருணி திருச்செந்தில்ராஜன் தெரிவு செய்யப்பட்டார்கள். இவர்களுக்கு எமது கல்வி நிலையத்தின் பாராட்டுக்கள் உரித்தாகும்.

### HSC 2021

2021ம் ஆண்டு HSC பரீட்சையில் 12 மாணவர்கள் தோற்றினார்கள். இவர்களுக்கு வேண்டிய கல்வியையும் பயிற்சியையும் பாடசாலையிலும், தமிழறிவகத்திலும் மேலதிக பயிற்சிகளை Zoom இணைய வழியினூடாகவும் வழங்கி வழிநடத்திய 12 ஆம் ஆண்டு ஆசிரியர்கள் திருமதி கிருஷ்ணகுமாரி நடராஜா, திருமதி ஜெயகௌரி ஜெயக்குமார் அவர்களுக்கும் 11ஆம் ஆண்டில் கற்பித்த ஆசிரியர்கள் திரு திருநாவுக்கரசு திருநந்தகுமார், திருமதி ஜெயகௌரி ஜெயக்குமார் அவர்களுக்கும், இவர்களுக்கு உதவியாக இருந்து கற்பித்த எமது பழைய மாணவனான செல்வன் ஜனார்த்தன் குமரகுருபரனுக்கும், HSC ஒருங்கிணைப்பாளர் திருமதி மாலினி சோமஸ்கந்தன் அவர்களுக்கும் இத்தருணத்தில் நன்றி கூறக்கடமைப்பட்டுள்ளேன். மற்றும் பரீட்சைக்கு மாணவர்களைத் தயார்படுத்துவதற்கு உதவிய திரு ம தனபாலசிங்கம், திரு குலசிங்கம், திரு கானா பிரபா, செல்வன் பரத், செல்வி கவிஜா, செல்வி சகானுஜா ஆகியோருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அத்தோடு எமது பழைய மாணவர்களான செல்வன் சிஜர்தன், செல்வன் லோஷனன், செல்வன் அபிநயன், செல்வன் கவிசந்த், செல்விகள் டிகானா, காவியா, விஜயாள், சஞ்சனா, சினேகா, சக்தி ஆகியோர் தமது பரீட்சை அனுபவங்களைப் பகிர்ந்து மாணவர்களை ஊக்கப்படுத்தினார்கள். இவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

## 2021ஆம் ஆண்டில் 11ம் வகுப்பில் சேரவிரும்பும் மாணவர்களுக்கும், அவர்களது பெற்றோர்களுக்குமான அறிமுகக் கூட்டம்

அடுத்த வருடம் - 2022இல் பதினொராம் வகுப்பில் HSC பரீட்சையில் தமிழை ஒரு பாடமாக எடுக்க விரும்பும் மாணவர்கள், வேண்டிய தகவல்களைப் பெற உதவும் வகையில் 24-11-2021 அன்று ஒரு தகவல் அமர்வு நடைபெற்றது. அதனை ஒழுங்கு செய்த HSC இணைப்பாளர், திருமதி மாலினி சோமஸ்கந்தன் அவர்களுக்கும் அக்கலந்துரையாடலைச் சிறப்பாக நடாத்திய ஆசிரியர் திரு. திருநந்தகுமார், வகுப்பு ஆசிரியர் திருமதி புவனேஸ்வரி புருஷோத்தமர் அவர்களுக்கும் எமது நன்றிகள்.

## பேச்சுப்போட்டிகள், தமிழறிவுப் போட்டிகள்

இவ்வருடம் பேச்சுப்போட்டி பாலர் வகுப்பு முதல் 12ம் ஆண்டு வரை மாணவர்களுக்கு பாடசாலையில் நடைபெற்றது. இப்போட்டிகளில் பங்குபற்றிய அனைத்து மாணவர்களுக்கும் எமது பாராட்டுக்கள். இப்போட்டிகளைச் சிறப்புற நடாத்திய கல்விக்குழுப்பொறுப்பாளர் தலைமையில் பணியாற்றிய கல்விக்குழு அங்கத்தினருக்கும், நடுவர்களுக்கும் போட்டி நடாத்துனர்களுக்கும், நிர்வாகக்குழு அங்கத்தினர்களுக்கும் எமது நன்றிகள்.

தமிழறிவுப்போட்டி நாட்டின் அசாதாரண சூழ்நிலை காரணமாக இவ்வருடம் நடாத்த இயலாமைக்கு வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

## கலாநிதி வேந்தனார் இளங்கோ ஞாபகார்த்த தமிழ்ப் புலமைச் சான்றிதழ்ப் பரீட்சை

நியூ சவுத் வேல்ஸ் மாநில தமிழ்ப்பாடசாலைகளின் கூட்டமைப்பினால் வருடந்தோறும் நாடாத்தப்படும் கலாநிதி வேந்தனார் இளங்கோ ஞாபகார்த்த தமிழ்ப் புலமைச் சான்றிதழ்ப் பரீட்சையில் இவ்வருடம் ஆரம்ப பிரிவில் 53 மாணவர்களும் இடைநிலை கீழ் பிரிவில் 36 மாணவர்களும் இடைநிலை மத்திய பிரிவில் 18 மாணவர்களும் இடைநிலை மேல் பிரிவில் 30 மாணவர்களும் மேற்பிரிவில் 30 மாணவர்களும் தோற்றினர்.

## 2021 பரீட்சைக்குழு அங்கத்தவர்கள்

பேச்சுப் போட்டிக்கான பேச்சுகளையும், தமிழறிவுப் போட்டிக்கான வினாக்களையும் அரை ஆண்டு, ஆண்டிறுதிப் பரீட்சை வினாத்தாள்களையும் தயாரிப்பதற்கு உதவி செய்யும் நோக்குடன் திரு பாஸ்கரன், திரு கௌரிதாசன், திரு சோமாஸ்கந்தன், திரு செல்வகுமார், திரு வனதேவா, திரு கருணாசலதேவா ஆகியோர் எமது நிர்வாகக் குழுவினரால் மீண்டும் அங்கீகரிக்கப்பட்டனர். திரு கௌரிதாசன் அவர்கள் ஒருங்கிணைப்பாளராக இருந்து மற்றய அங்கத்தவர்களுடன் இணைந்து உரிய நேரத்தில் வினாத்தாள்களைத் தயாரித்து போட்டிகளையும் பரீட்சைகளையும் நாடத்துவதற்கு உதவினார். பரீட்சைக்குழு அங்கத்தவர்கள் அனைவரினதும் சேவைக்கு எமது மனமார்ந்த நன்றிகள்.

## நூலகத் திட்டம்

மாணவர்களுக்கு பாடசாலையில் வகுப்புகள் நடைபெற்றபோது செயல்பட்டது. இவ்வாண்டு நாட்டின் அசாதாரண சூழ்நிலை காலங்களில் பாடசாலை Zoom இணையவழியுனூடாக நடைபெற்றபோது நடைமுறைப்படுத்த முடியாமைக்கு வருந்துகிறோம். அடுத்த ஆண்டு இத்திட்டம் தொடர்ந்து செயற்படுத்தப்படும் என்று எதிர்பார்க்கிறோம்.

## ஆசிரியர்கள் பயற்சிப்பட்டறைகள்

ஹோம்புஷ் தமிழ்க் கல்வி நிலையம் கற்றல் மற்றும் கற்பித்தலில் அதிக கவனம் செலுத்தி வருகிறது. அவ்வாறு, ஆசிரியர்களுக்கு தக்க பயிற்சிகளையும், கற்பிக்கும் ஆற்றலினை வளர்ப்பதற்கும் 2021ம் ஆண்டில் மூன்று பயிற்சி பட்டறைகள் நடாத்தப்பட்டன.

1. மாணவர் மதிப்பீடு மற்றும் அறிக்கை எனும் தலைப்பில் முன்னாள் அதிபர் மற்றும் முன்னாள் தலைவருமான திரு திருநாவுக்கரசு திருநந்தகுமார் அவர்கள் நிகழ்த்தினார். ஆசிரியர்கள் கருத்து பரிமாற்றத்தில் கலந்து கொண்டமை வரவேற்கத்தக்க விடயமாக காணப்பட்டது.

2. தொடர்ந்து எமது பாடசாலை, இணை ஆசிரியர்களின் பங்களிப்பினை பெரிதும் வரவேற்கிறது. இவர்களை ஊக்கப்படுத்துவதும், சிறந்த முறையில் வழிகாட்டுவதும் எமது முக்கிய குறிக்கோள்களில் ஒன்றாகும். அவ்வகையில் திரு திருநாவுக்கரசு திருநந்தகுமார் அவர்கள், தமிழ் பாடத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட முக்கிய விடயங்களை இணையவழியினூடாக எடுத்துரைத்தார்.

3. இறுதியாக நாட்டின் அசாதாரண சூழ்நிலை காரணமாக தமிழ் அறிவு போட்டியினை Kahoot மூலம் நிகழ்த்த ஹோம்புஷ் தமிழ் கல்வி நிலையம் முடிவு செய்தது. அதிகமான ஆசிரியர்களுக்கு இது புதிதாக இருந்தமையால், எமது பழைய மாணவனான செல்வன் ஜனார்த்தன் குமரகுருபரன் தக்க பயிற்சியினை இணையவழியினூடாக வழங்கினார்.

NSWFCLS இனால் ஒழுங்கு செய்யப்பட்ட பல Master Class இல் எமது ஆசிரியர்கள் பலர் கலந்துகொண்டு கற்பித்தலுக்குத் தேவையான விடயங்களை அறிந்துகொண்டதுடன் பல அறிவுரைகளையும் பெற்றுக் கொண்டனர்.

## பாடசாலை இணையத்தளம்

எமது பாடசாலையின் இணையத்தளம் மாணவர் கைநூல், கடந்த கால பரீட்சை வினாத்தாள்கள், தமிழறிவுப்போட்டி வினாக்கள், HSC தகவல்கள் போன்ற ஆவணங்களுடன் புதுப்பிக்கப்பட்டுள்ளது. இதற்கு உதவிய திரு ராம் கணேஷன் அவர்களுக்கு எமது நன்றிகள்.

## VISION 2020–2025 (பார்வை 2020–2025)

கடந்த ஆண்டு ஆரம்பிக்கப்பட பார்வை 2020-2025, நாட்டின் அசாதாரண சூழ்நிலை காரணமாக முன்னெடுத்துச் செல்வது தாமதமாகி இருப்பினும் கற்பித்தல் கற்றல் தொடர்பான தொழில்நுட்ப வளர்ச்சியில் பல முன்னேற்றங்களைக் கண்டுள்ளது என்றே கூறவேண்டும். உதாரணமாக Zoom, Google Classroom போன்றவற்றின் பயன்பாடுகளைக் கூறலாம். சமூக வலைத் தளங்கள் (Mailchimp, facebook, whatsapp groups) ஊடாக துரித தொடர்பாடல்கள் விருத்தி செய்யப்பட்டுள்ளன.

மேலும் காலத்தின் தேவையை அறிந்து மாற்றங்களையும் புதிய நடைமுறைகளையும் புகுத்துவது அவசியமாகும்.

அத்துடன் பாடத் திட்டங்கள், பாடக் குறிப்புகள் தயாரித்தல், மாணவர் வருகை கண்காணிப்பு, மாணவர்களின் மதிப்பெண்கள் போன்ற செயற்பாடுகளை இலகுவாக்க NSWFCLS இனால் பரிந்துரைக்கப்பட்ட Additio (Learning Management System)த்தை எமது ஆசிரியர்கள் செயற்படுத்தியுள்ளார்கள்.

ஆசிரியை திருமதி விஜா யோகேந்திரா அவர்கள் 1996 ஆம் ஆண்டு நமது பாடசாலையில் இணைந்து கடந்த 25 வருடங்களாக தமிழ் கல்வியை பயிற்றுவித்து மிகவும் அர்பணிப்புடன் தமது அரிய சேவையை செய்துள்ளார்கள். ஹோம்புஷ் தமிழ் பாடசாலை தமது கலை விழா நிகழ்வில் 20 மற்றும் 25 வருட சேவையை பாராட்டி கௌரவித்துள்ளது. மேலும் இவருக்கு நியூ சவுத் வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு 20 மற்றும் 25 வருட சேவையை பாராட்டி இனிய தமிழ் மாலை நிகழ்வில் கௌரவித்துள்ளது.

ஆசிரியை திருமதி மதிமாலா கோபிநாத் அவர்கள் 2010 ஆம் ஆண்டு நமது பாடசாலையில் இணைந்து கடந்த 11 வருடங்களாக தமிழ் கல்வியை பயிற்றுவித்து மிகவும் அர்பணிப்புடன் தமது அரிய சேவையை செய்துள்ளார்கள். ஹோம்புஷ் தமிழ் பாடசாலை தமது கலை விழா நிகழ்வில் 10 வருட சேவையை பாராட்டி கௌரவித்துள்ளது. மேலும் இவருக்கு நியூ சவுத் வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு 10 வருட சேவையை பாராட்டி இனிய தமிழ் மாலை நிகழ்வில் கௌரவித்துள்ளது.

இவர்கள் இருவருக்கும் ஹோம்புஷ் தமிழ் பாடசாலையின் சார்பாக எமது நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்தக் கல்வி நிலையத்தின் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் பெற்றோர்கள், நிர்வாகக்குழு அங்கத்தினர்கள் ஆகியோரின் அயராத உழைப்பே பாடசாலையின் உயர்வுக்குக் காரணமாக உள்ளது. அதே நேரம் இங்கு பணிபுரிந்து சென்ற முன்னாள் அதிபர்களையும், ஆசிரியர்களையும் பழைய மாணவர்களையும் நாம் மறந்துவிட முடியாது. அவர்களின் கடமை உணர்வுடன் கூடிய உழைப்பும் நல்ல நோக்கமும் பாடசாலைக்கு உறுதுணையாக இருந்துள்ளதை நினைந்து அவர்களுக்கும் இவ்வேளையில் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இவ்வருட நிகழ்வுகளையும், திட்டங்களையும், செயற்பாடுகளையும் சிறப்புடன் செயற்படுத்தத் தோளோடு தோள் நின்று உதவிய உபதலைவர்கள், செயலாளர், உப செயலாளர், பொருளாளர், உபபொருளாளர் முதலியோரோடு, பொதுநலக்குழு அங்கத்தினர்கள், கல்விக்குழு அங்கத்தினர்கள், கலாசாரக்குழு அங்கத்தினர்கள், அதிபர், ஆசிரியர்குழு, மாணவர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள் அனைவருக்கும் சிரம் தாழ்த்தி எனது நன்றிகளைத் தெரிவித்து எனது அறிக்கையை நிறைவு செய்கிறேன்.

நன்றி

வணக்கம்

**திரு சாலை மணிமுடியன் மெய்வழி சிங்காரவேல் அனந்தர்**



# செயலாளரின் செய்தி

அன்னையின் பாசத்திற்கு இணையாக நேசிக்கும் எனதருமைத் தமிழன்னையைப் போற்றி இவ்வையகத்தில் தமிழ்த் தொண்டாற்றுதட்கு எனக்கு கிடைத்த வாய்ப்பாகக்கருதி இரண்டாவது வருடமாகவும் நான் ஏற்றுக்கொண்ட செயலாளர் என்னும் பதவியில் எனதருமை தமிழுக்குப் பணியாற்ற எனக்கு வாய்ப்பளித்த நிர்வாகசபை உறுப்பினர்களுக்கும் மற்றும் ஆசிரியர்களுக்கும் முதலில் நான் மனமார்ந்த நன்றிகளைச் சொல்லிக்கொள்கிறேன். உலகளாவிய ரீதியில் தாக்கத்தை ஏற்படுத்திய கொரோனா என்னும் கொடிய நோய் தனது வீரியத்தைக்காட்டிய வேளையிலும் எவ்வித தொய்வுமின்றி கணனி வழியில் வகுப்புகள் நடாத்தப்பட்டதனை எண்ணி மிகவும் பெருமிதம் கொள்கிறேன். கடந்த ஒரு வருட காலத்தில் தற்போதைய நிர்வாக சபையினரினதும் ஆசிரியர்கள் அதிபரின் ஒத்துழைப்போடு எம்மால் அளப்பரிய வேலைத்திட்டங்களை முன்னெடுத்து அவற்றினை வெகு சிறப்பாக செயல்திட்டமாக மாற்றுவதட்கும் வெற்றிபெறச்செய்வதட்கும் ஏட்புடையதாக அமைந்ததை எண்ணிப்பார்க்கையில் மனம் மகிழ்கிறது. அதுமட்டுமன்றி எமது ஹோம்புஷ் பாடசாலையின் மாணவர்கள் பெற்றுக்கொண்ட பெறுபேறுகள் எம்மை மார்தட்டி பெருமிதமடையச் செய்துள்ளது என்றால் அது மிகையாகாது.

"ஈரம் இருக்குமவரை இலைகள் உதிர்வதில்லை,
நம்பிக்கை இருக்கும்வரை நாங்கள் சோர்வதில்லை"

என்னும் எனக்கு மிகவும் பிடித்த வாக்கியத்தை சொல்லி அன்னைத்தமிழ், அன்புத்தமிழ், இலக்கியத்தமிழ் எம்மை இயக்கிடும் தமிழ்த் தாய்க்கு வணக்கத்தையும் அதை முன்னெடுத்துச் செல்லும் எமது தமிழ்ப் பாடசாலையான ஹோம்புஷ் தமிழ் பாடசாலைக்கு எனது வாழ்த்துக்களையும் தெரிவித்து நிறைவுசெய்கிறேன்.

வாழ்க தமிழ்

**கிருஷ்ணகுமார் சந்திரசேனன்**



# அதிபரின் செய்தி

ஹோம்புஷ் தமிழ்க்கல்வி நிலையத்தின் 2021 ஆம் ஆண்டுக்ாகன கல்வி நடவடிக்கைகள் நிறைவு பெறுகின்ற வேளையில் அதிபர் செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சி அடைகின்றேன். இவ்வாண்டுத் தொடக்கம் முதல் கொரோனாக் கட்டுப்பாடுகளுக்கு அமைய, ஒவ்வொரு சனிக்கிழமையும் எமது தமிழ்க்கல்வியை ஜூன் மாதம் வரை நேரடியாக வகுப்பறையில் வழங்க முடிந்தது. ஆனால் ஜூன் மாத இறுதியில் ஆரம்பித்த டெல்டா அலை எமது வகுப்புகளைப் பாதித்தது. நவம்பர் 6ந் திகதி நேரடி வகுப்புகளை மீண்டும் ஆரம்பிக்கும் வரை நிகழ்நிலையாகவே அனைத்து வகுப்புகளையும் ஆசிரியர்கள் நடாத்தினார்கள். சகல வகுப்புகளும் சிறப்புற நடைபெற்றன.

இவ்வாண்டு தமிழ்மொழி கற்பித்தல் நடைமுறைகள் பாதிக்கப்படாவிட்டாலும் வழமையான எமது கல்வி நடவடிக்கைகள் அனைத்தையும் நிறைவுசெய்ய முடியவில்லை என்பது வருத்தம் தருகின்றது. பேச்சுப் போட்டிகளை நடாத்திய நாம் தமிழறிவுப் போட்டி, கலைவிழா ஆகியவற்றை நடத்த முடியாமல் நின்றோம். ஆனாலும் அரையாண்டுப் பரீட்சை, இறுதியாண்டுப் பரீட்சைகளைக் குறிப்பிட்டபடி அதே நாள்களில் நடாத்த முடிந்தது. இறுதி அரையாண்டில் மாதாந்த மதிப்பீடுகளை ஆசிரியர்கள் பல சவால்களுக்கு மத்தியில் தான் நடாத்தினார்கள். மதிப்பீடுகளிலும் பரீட்சைகளிலும் தமது திறமையை வெளிப்படுத்திய மாணவர்கள் இன்றைய விழாவில் பரிசு பெறுகிறார்கள். பரிசு பெறும் மாணவர்களுக்கும் அவர்களுக்குக் கற்பித்த ஆசிரியர்களுக்கும் உறுதுணையான பெற்றோர்களுக்கும் எனது வாழ்த்துகள்.

ஏறத்தாழ நான்கு மாதங்களாக எமது தமிழ்க்கல்வி இணையவழி நிகழ்நிலையாகவே நடைபெற்றது. ஆரம்பவகுப்பு சிறுவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் சிரமங்கள் அதிகம். பெற்றோர்களின் பங்கு இவ்விடத்தல் சிறப்பானதும் பேருதவியானதுமாகும். வகுப்புகளுக்கு ஏற்ற விதத்தில் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தித் திறம்பட வகுப்புகளை ஆசிரியர்கள் நடாத்தினார்கள். இவ்வேளையில் ஆசிரியர்கள், உதவி ஆசிரியர்கள், பெற்றோர்கள் அனைவரையும் பாராட்டுகின்றேன்.

இவ்வருடம் துர்ரதிஷ்டவசமாக எமது மாணவர்களுக்கான உயர்தரச் சான்றிதழ் பரீட்சை நடைபெறவில்லை. கொரோனாத் தொற்றினால் ஏற்பட்ட முடக்கம் பரீட்சையை நடாத்த முடியாத அளவுக்குப் பாதிப்பினைத் தந்துள்ளது. HSC மாணவர்களுக்கான வகுப்புகளை இணையவழியிலும் நேரடியாகவும் அவர்களது பொறுப்பாசிரியர்களும் உதவியாசிரியர்களும் வேறு உதவியாளர்களும் நடாத்தினார்கள். பரீட்சையை எதிர்கொள்ள மாணவர்கள் தயாராக இருந்தாலும் பரீட்சை நடைபெறவில்லை என்பது மிகுந்த வருத்தத்தையளித்தது. ஆனாலும் அவர்களுக்கு வகுப்பு மதிப்பீடுகளை அடிப்படையாக வைத்துப் பெறுபேறுகள் வழங்கப்படும். HSC மாணவர்களையும் ஆசிரியர்களையும் இவ்வேளையில் அவர்களது கடின உழைப்பைப் பாராட்டி வாழ்த்துகிறேன்.

இவ்வருட நிர்வாகக் குழுவினர் பல விரிவான திட்டங்களையும் முன்னெடுப்புகளையும் மேற்கொண்டிருந்தனர். பல்கலாசாரத்திட்ட அடிப்படையில் கிடைத்த மானியத்தைப் பயன்படுத்திப் பாடசாலை நூல்நிலையத்திற்கான புத்தகங்கள், மாணவர்களுக்கான அகராதிகள், விசேட பாடசாலைப்பைகள் என்பனவற்றைக் கொள்வனவு செய்துள்ளார். அவற்றை இன்று மேடையில் மாணவர்களுக்கு வழங்கி மகிழ்விக்கவுள்ளார்கள். நிர்வாகக்குழுவினரின் அயராத உழைப்பைப் பாராட்டி மகிழ்கிறேன். இன்றைய கட்டுப்பாடான சூழலிலும் இன்றைய விழாவைச் சிறப்புறநடத்த உதவிய நிர்வாகக்குழுவினர், ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் அனைவருக்கும் எனது வாழ்த்துகள் உரியதாகும்.

நி.ச.வே தமிழ்ப்பாடசாலைகள் கூட்டமைப்பு நடாத்துகின்ற கலாநிதி வேந்தனார் இளங்கோ ஞாபகார்த்தப் பரீட்சை இம்முறை ஒழுங்காகக் குறிப்பிட்டதேதியில் நடைபெற்றது. அனைத்து மாணவர்களும் பங்கு கொண்டனர். ஆனால் தொடர்ந்து வந்த வீட்டு முடக்கம் காரணமாக விடைத்தாள்கள் திருத்துதல் மிகக் காலதாமதம் ஆனது. ஆனாலும் மாணவர்களின் பெறுபேறுகள் இவ்வாரம் வெளியிடப்பட்டுள்ளன.

ஆசிரியர்களுக்கான பட்டறைகள், கூட்டங்கள் அனைத்தும் இவ்வாண்டு இணையவழியாக நிகழ்நிலையில் நடைபெற்றன. நிகழ்நிலைக் கற்பித்தலை மிகச் சிறப்பான முறையில் மேற்கொள்ள எமது ஆசிரியர்கள் பலரும் நி.ச.வே மாநில சமூக மொழிப் பாடசாலைகள் கூட்டமைப்பு நடாத்திய ஆயளவநச Class, குறுகிய காலப் பயிற்சிப் பட்டறைகள் ஆகியவற்றில் பங்கு கொண்டனர். 3.10.21 இல் எமது உதவியாசிரியர் ஜனார்த்தன் குமரகுருபரன் வகுப்பறையில் மாணவர்களைக் கவரத்தக்க முறையில் Kahoot ஐக் கையாளவும் பயன்படுத்தவும் நிகழ்நிலையில், ஆசிரியர்களுக்கு விளக்கம் அளித்தார். இவ்விடத்தில் பங்கு கொண்ட ஆசிரியர்களையும் ஜனார்த்தனையும் பாராட்டி மகிழ்கிறேன்.

K – 10 புதிய பாடத்திட்டத்தை அமுல்படுத்துவதற்கும் ஆசியர்களுக்கு அதுபற்றிய சரியான புரிதலையும் அணுகுமுறையையும் பெறுவதற்காக எமது ஆசிரியர் திரு. திருநந்தகுமார் அவர்கள் இவ்வருட ஆரம்பம் முதல் பலதடவைகள் ஆசிரியர்களுக்கான பட்டறைகளை எமது பாடசாலை மட்டத்தில் நடாத்தினார். இதனால் ஆசிரியர்கள் பாடத்திட்டங்களையும் வகுப்பறைக் கற்பித்தலையும் மேம்படுத்த முடிந்தது. உதவி ஆசிரியர்களுக்காக விசேடமாக ஒரு பட்டறையையும் நடாத்தியிருந்தார். பட்டறைகளை ஒழுங்கமைத்த நிர்வாகக்குழுவினருக்கும் பட்டறையைக்கொண்டு நடாத்திய திரு. திருநந்தகுமார் அவர்களுக்கும் பங்கு கொண்ட ஆசிரியர்கள், உதவியாசிரியர்கள் அனைவருக்கும் எனது நன்றிகள் உரித்தாகும்.

எமது வருடாந்தக் கலைவிழாவினை நடாத்துவதற்கான அனைத்து முன் ஏற்பாடுகளையும் நிர்வாகக் குழுவினர் எடுத்தனர். ஆசிரியர் திரு.தேவராசா அவர்களும் நாடகத்தை எழுதித் தயாராக வைத்திருந்தார். ஆண்டிறுதிப் பரீட்சைக்குப் பின் ஆசிரியர்களும் நாமும் கலைவிழாவினை நடாத்தலாமென எதிர்பார்த்திருந்தோம். ஆனாலும் பொருத்தமான மண்டபவசதி கிடைக்காததால் கலைவிழாவினை நடாத்த முடியவில்லை. மாணவர்களின் மேலான வாய்ப்பு இம்முறை நழுவிவிட்டது வருத்தத்துக்குரியதே.

எமது கல்வி நிலையத்தின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும் உழைப்பு மிக்க எமது ஆசிரியர்களுக்கும், தம்பிள்ளைகளின் தமிழ்க்கல்வியில் அக்கறை கொண்ட பெற்றோர்களுக்கும் செயல்திறன் உள்ள நிர்வாகக் குழுவினருக்கும் நலன் விரும்பிகளுக்கும் இவ்விடத்தில் நன்றி கூறிக்கொள்கிறேன்.

எமது பாடசாலைப் பரீட்சைக் குழுவினர் ஆசிரியர்களுடன் ஒத்துழைத்துப் பரீட்சைகள், போட்டிகள் யாவற்றையும் நடாத்தி வருகிறார்கள். இவ்வாண்டும் பேச்சுப்போட்டி, அரையாண்டு, இறுதியாண்டுப் பரீட்சைகள் அனைத்தையும் மிகச் சிறப்பாகச் செய்ய உதவி செய்து பாடாசலையின் நடவடிக்கைகளை ஒழுங்காக்கி உள்ளனர். பரீட்சைக் குழுவினருக்கு எனது உள்ளங்கனிந்த நன்றிகள் உரியதாகும்.

இவ்வாண்டு இந்த அசாதாரண சூழலிலும் எனது கடமைகளைச் சிறப்புற நிறைவேற்ற என்னுடன் பயணித்த நிர்வாகக் குழுவினர் உப அதிபர்கள், HSC இணைப்பாளர், அனைத்து ஆசிரியர்கள், பெற்றோர்கள் அனைவருக்கும் எனது நன்றிகளை மகிழ்வுடன் கூறிக் கொள்கிறேன்.

உங்கள் அனைவருக்கும் இனிய நத்தார் வாழ்த்துகளோடு புதுவருட வாழ்த்துகளையும், பொங்கல் வாழ்த்துகளையும் கூறி உங்கள் கோடை விடுமுறையைப் பாதுகாப்பாகவும், மகிழ்ச்சியாகவும் கழிக்க வேண்டுகிறேன்.

நன்றி
வணக்கம்

**திருமதி. செல்வநாயகி சிவசுப்பிரமணியம்**



# HSC இணைப்பாளர் செய்தி

## 34ஆம் ஆண்டு நிறைவில்...

இன்று எமது கல்வி நிலையத்தின் 34 ஆவது ஆண்டு நிறைவுப் பரிசளிப்பு விழாவினைக் கொண்டாடுகின்றோம். கடந்த 21 வருடங்களாக தமிழை ஒரு பாடமாக உயர்தர (HSC) வகுப்பில் கற்பித்து ஹோம்புஷ் தமிழ்க் கல்வி நிலையம் பெருமையுடன் தலைநிமிர்ந்து நிற்கின்றது.

காலத்திற்கேற்ப புதுமைகளை உள்வாங்கி உலக அளவில் உயர்ந்து ஓங்கி நிற்கும் செம்மொழியாம் தமிழ் மொழியை நமது மாணவர்கள் பன்னிரண்டாம் வகுப்பில் ஒரு பாடமாக எடுப்பது மிகவும் மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். அவர்களை இந்நேரத்தில் பாராட்டுகின்றேன்! வாழ்த்துகின்றேன்!

கலாநிதி இளங்கோ வேந்தனாரின் அயராத முயற்சியினாலும் அதற்குத் துணையாக அமரர் விஜயரத்தினம், அமரர் சுந்தர் ஈஸ்வரன் முதலியோர் வழங்கிய அரசியல் அழுத்தத்தினாலும் 1999 ஆம் ஆண்டு நியூ சவுத் வேல்ஸ் மாநிலத்தில் முதன்முறையாக HSC பரீட்சையில் தமிழ் ஒரு பாடமாக அங்கீகரிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து 2001 ஆம் ஆண்டில் இந்தத் தேர்வுக்கு அமர்ந்த 21 மாணவர்களும் எமது பாடசாலையை சேர்ந்தவர்கள் ஆவார். அவர்களும், பெற்றோர்களும் காட்டிய ஊக்கமும், எமது ஆசிரியர்கள் வழங்கிய கல்விச் செல்வமும், அயராத உழைப்பும் அன்று முதல் இன்றுவரை 390 மாணவர்கள் HSC பரீட்சையில் தமிழை ஒரு பாடமாக எமது கல்வி நிலையத்திலிருந்து எடுப்பதற்கு காரணமாக இருந்துள்ளன. இவ்வருடம் 12 மாணவர்கள் HSC பரீட்சையில் தமிழை ஒரு பாடமாக எடுத்துள்ளார்கள். அவர்களுக்கு முதற்கண் எனது பாராட்டுகள்.

இவ்வேளையில் இந்த வருடத்திற்கான எமது பாடசாலையின் உயர்தர சான்றிதழ் பரீட்சைக்கான தமிழ் கல்வியை பற்றிய பதிவை செய்து கொள்வதில் மகிழ்ச்சி அடைகின்றேன். இவ்வருடம் முன்னைய ஆண்டுகளைப் போல் அல்லாது சவால்கள் நிறைந்த ஆண்டாக இருந்தபோதும் சவால்களை எதிர்நோக்கி வெற்றிகரமாக வகுப்பு மாணவர்களுக்கு வேண்டிய கல்வியையும் பயிற்சியையும் சிறப்பாக வழங்கி வழிநடத்திய 12ஆம் ஆண்டு ஆசிரியர்கள் திருமதி கிருஷ்ணகுமாரி நடராஜா, திருமதி ஜெயகௌரி ஜெயக்குமார் மற்றும் திரு ஜனார்த்தனன் குமரகுருபரன் ஆகியோருக்கும் பதினோராம் ஆண்டு ஆசிரியர்கள் திரு திருநாவுக்கரசு திருநந்தகுமார், திருமதி ஜெயகௌரி ஜெயக்குமார் மற்றும் செல்வி மாதுமை கோணேஸ்வரனுக்கும் முதலில் நன்றியை கூற விரும்புகின்றேன்.

மேலும் எமது HSC மாணவர்களுக்கு மேலதிக வகுப்புகளை நடாத்த இடம் தந்து உதவிய சிட்னி தமிழ் அறிவகத்திற்கும் நாம் நன்றி கூறுகின்றோம்.

கடந்த வருடங்களைப் போல் அல்லாது Covid-19 தொற்றுநோய் காரணமாக இணையவழி ஊடாக பெரும்பாலான வகுப்புகள் நடைபெற்றன. இதற்கு ஆசிரியர்கள் அயராது உழைத்து உள்ளார்கள். அத்தோடு மாணவர்களும் அவர்களுடன் ஒத்துழைத்து நன்றாக கற்றுள்ளார்கள்.

இவ்வருடமும் நாம் இரண்டு பட்டறைகளை இணையவழியூடாக நடாத்தி பெற்றோருக்கும் மாணவர்களுக்கும் தேவையான தகவல்களை வழங்கினோம்.

இப்பட்டறைகளை திறம்பட நடாத்த உதவிய ஆசிரியர்களுக்கு மனமார்ந்த நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன். இம்முறை வழமைக்கு மாறாக HSC பரீட்சை நடைபெறவில்லை. பாடசாலையில் இருந்து பாடசாலை ஆசிரியர்களால் வழங்கப்பட்ட புள்ளிகளை பிரதான பாடசாலைகளுக்கு உரிய நேரத்தில் அனுப்பினோம். இந்தப் புள்ளிகளை NSW Education Standards Authority (NESA) தரப்படுத்தி எமது மாணவர்களுக்கு பரீட்சை பெறுபேறுகளை வழங்க உள்ளனர்.

HSC பரீட்சையில் நான்கு திறன்கள் மதிப்பிடப்படுகின்றன. அதன்படி உரையாடல் பயிற்சிக்கு உரிய மதிப்பீடுகளைச் செய்து கொள்ள திருவாளர்கள் கானா பிரபா, அண்ணாமலை சுந்தரம், தனபாலசிங்கம், குலசிங்கம் ஆகிய தமிழறிஞர்கள் ஆசிரியர்களுக்கு உதவினார்கள். ஆசிரியர்களுக்கு வகுப்பறை கலந்துரையாடலுக்கு கவிஜா விக்னேஸ்வரன், சகானுஜா தியாகேசன், பரத் விஜயகுலசிங்கம் ஆகியோர் உதவியுள்ளார்கள். மேலும் எமது மாணவர்களுக்கு ஊக்கத்தை அளிப்பதற்கு மேலதிக உதவிகளை வழங்கிய விஜயாள் விஜய், சஞ்சனா சிவசோதிராஜா, டிக்கானா சதீஸ், காவியா சித்திவிநாயகர், சிஜர்தன் ஜசீந்திரன், அபிநயன் ராஜ்குமார், கவிஷாந்த் விக்னேஸ்வரன், லோஷணன் ஆதவன் ஆகியோருக்கும் எமது நன்றிகள். மேலும் எமது முன்னாள் HSC இணைப்பாளர் கலாநிதி அனுஷியா கண்ணன் அவர்கள் பலவிதங்களிலும் எனக்கு உதவியுள்ளார். அவருக்கும் எனது நன்றிகள்.

HSC மாணவர்களின் கல்வியில் நிர்வாகக் குழுவினரும் மிகக் கவனம் எடுத்து மாணவர்களுக்கு வேண்டிய மேலதிக வகுப்புச் செயற்பாடுகளுக்குத் தேவையான பழைய வினாத்தாள்களை அச்சிட்டு வழங்கி வருகின்றனர். அவர்களின் அயராத பணிக்கு மிகுந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

தமிழ் உயர்தரச் சான்றிதழ் பரீட்சை ஆரம்பித்த காலம் முதல் இன்றுவரை எமது கல்வி நிலையத்திலிருந்து இப்பரீட்சைக்குத் தோற்றி மாணவர்கள் அடைந்த பெறுபேறுகள் கீழே தரப்பட்டுள்ளன:

| வருடம் | 2001 | 2002 | 2003 | 2004 | 2005 | 2006 | 2007 | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 | 2018 | 2019 | 2020 | 2021 | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **மாணவர்** | 21 | 9 | 12 | 19 | 17 | 19 | 20 | 9 | 28 | 23 | 28 | 28 | 31 | 16 | 21 | 17 | 19 | 13 | 13 | 15 | 12 | 390 |
| **Band 6** | 2 | 3 | 4 | 4 | 1 | 1 | 4 | 3 | 11 | 3 | 14 | 4 | 2 | 2 | 11 | 5 | 9 | 9 | 8 | 11 | | 111 |
| **Band 5** | 11 | 6 | 8 | 10 | 11 | 16 | 16 | 5 | 15 | 19 | 10 | 15 | 22 | 10 | 10 | 11 | 9 | 4 | 5 | 4 | | 217 |
| **Band 4** | 5 | 0 | 0 | 3 | 5 | 2 | 0 | 1 | 2 | 1 | 4 | 5 | 4 | 3 | 0 | 1 | 1 | 0 | 0 | 0 | | 37 |
| **Band 3/2** | 3 | 0 | 0 | 2 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 4 | 3 | 1 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | | 13 |

எமது தாய் மொழியைக் கற்று நம் சிறுவர்கள் மேன்மையுறவும் மேதினியில் தமிழை வாழ வைக்க உழைக்கவும் விரும்பும் பெற்றோர், மாணவர், ஆசிரியர், அதிபர், நிர்வாகக் குழுவினர், மற்றும் ஒத்துழைப்பு வழங்கும் நலன்விரும்பிகள் பலரும் ஒன்றிணைந்து தமிழ் மொழியையும் எமது கல்வி நிலையத்தையும் மேம்படுத்த உழைப்போமாக. வாழ்க தமிழ்!

மேலும் இவ்வேளையில் அனைவருக்கும் எனது நத்தார் புத்தாண்டு வாழ்த்துக்களை தெரிவிக்கின்றேன்.

நன்றி!

**திருமதி மாலினி சோமாஸ்கந்தன்**

# பொருளாளரின் கண்ணோட்டத்திலிருந்து



தமிழ்க் கல்வி நிலையம் ஹோம்புஷ்ஷின் 2021க்கான ஆண்டிறுதி மின்மடலினூடாக உங்களைச் சந்திப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன். இப்பதவிக்கு என்னைத் தெரிவு செய்தது மட்டுமன்றி சகல ஆதரவுமளித்த என் சக நிர்வாகக்குழு அங்கத்தவர்களுக்கு எனது நன்றிகள். பாடசாலை வரவு செலவுகளை உடனுக்குடன் பதிவு செய்துதவிய திருமதி சாந்தினி ரதன்தாஸ் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கொரோணா எனும் கொடுங்கோலன் உலகெங்கும் தலைதூக்கி இருக்கும் வேளையிலும், எமது தமிழ்க் கல்வி நிலைய அதிபர், உப அதிபர்கள், ஆசிரியர்கள், நிர்வாகக்குழு அங்கத்தவர்களின் அயராத உழைப்பினால் இணையவழி வகுப்புகளை வெற்றிகரமாக நடத்த முடிந்தது. இவ்வகுப்புகளுக்கு பெற்றோர்கள் உறுதுணையாக இருந்தமை குறிப்பிடத்தக்கது. எவ்வகைச் சவால்கள் இருந்த போதிலும் மாணவச் செல்வங்களினது தமிழ்க் கல்விக்கு இடையூறின்றி தமிழ்க் கல்வி நிலையம் ஹோம்புஷ் தனது சேவையையாற்றி வருகிறது என்றால் மிகையாகாது.

சுகாதாரத் திணைக்களக் கட்டுப்பாடுகளுக்கமைய நிர்வாகக்குழு மாற்றங்களை அமுல்ப்படுத்திய வேளையில், பாடசாலை சார்ந்த சமூகத்தின் ஒத்துழைப்பு அரும் பங்காற்றியது அவற்றில் குறிப்பாக இணையவழியூடாக கட்டணங்களைக் செலுத்துதல், இளஞ்சிறார்களை கொடுக்கப்பட்ட நேரத்தில் விட்டு எடுத்தல் போன்றவை சில.

ஹோம்புஷ் தமிழ்ப்பாடசாலை வளர்ச்சிக்கு தொடர்ந்து உதவுவோமாக.

வாழ்க தமிழ்! வளர்க தமிழ்க் கல்வி நிலையம் ஹோம்புஷ்!

**திரு பவானந்தன் நடராசா**

# கொரோனாத் தொற்றும் எமது தமிழ்க்கல்வி கற்றல்-கற்பித்தலும்

2019 ஆம் ஆண்டில் சீனாவின் வுகான் மாகாணத்தில் முதலில் கண்டறியப்பட்ட கொரோனா வைரஸ் (Covid-19) தொற்றானது அகில உலகையும் புரட்டிப் போட்டது யாவரும் அறிந்ததே. மனித உயிர்களைப் பெருமளவில் காவு கொண்ட கொரோனா வைரஸ் மருத்துவ உலகுக்குமட்டும் சவாலாகவில்லை. ஒவ்வொருவருடைய அன்றாட வாழ்வியலையும் பொருளாதார வர்த்தக நடவடிக்கைகளையும் தொழில் வாய்ப்புகளையும் மாணவர்களின் கல்வி நடைமுறைகளையும் சமூகப் பொழுதுபோக்கு, விழாக்கள், கொண்டாட்டங்களையும் ஒரு புறம் தள்ளி வைத்துவிட்டது. ஒட்டு மொத்த சமூகத்தின் அனைத்து நடவடிக்கைகளையும் நிறுத்தி மக்கள் அனைவரையும் வீடுகளில் முடங்க வைத்தது. மாணவர்களின் கல்வி கற்றல்-கற்பித்தல் நடவடிக்கைள் வழமையான முறையில் நடைபெற முடியாமல் பாடசாலைகள் மூடப்பட்டும், கல்வி கற்றல்-கற்பித்தல் சிலவாரம் நிறுத்தப்பட்டும், தொடர்ச்சியாகப் பலமாதங்கள் மாணவர்கள் நிகழ்நிலை (Zoom) வகுப்புகளில் கற்றலை மேற்கொண்டதுமான அனுபவம் எமக்கு நிறைவே உண்டு.

பிரதான பாடசாலைகள் அரச சுகாதார அறிவுறுத்தல்களுக்கு அமைய மூடப்பட்டுச் சென்ற ஆண்டும் (2020) இவ்வாண்டும் (2021) பலமாதங்களாக நிகழ்நிலை வகுப்புகள் மூலமே கற்றல்-கற்பித்தல் நடவடிக்கைகள் அமைந்தன. இந்நடைமுறைகளே சமுதாய மொழிப்பாடசாலைகளுக்கும் வழங்கப்பட்டதோடு மேலதிக நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன. எமது ஹோம்புஷ் தமிழ்க் கல்வி நிலையத்தை நோக்கில், சென்ற ஆண்டு (2020) மார்ச் மாதத்தில் இருந்து நிகழ்நிலை வகுப்புகளை நாம் நடத்தினாலும் அவ்வாண்டுக்குரிய வகுப்பறைக் கல்வி நடவடிக்கைகள் அனைத்தையும் நிறைவு செய்து வெற்றி கண்டோம் என்றே கூறலாம். இவ்வாண்டு (2021) ஜூன் வரை அமைதியாக ஒவ்வொரு வாரமும் எமது தமிழ்க்கல்வி செவ்வனே நடைபெற்று வந்தது. ஆனால் ஜூன் மாதத்தில் இவ்வருட கொரோனாத் தொற்றின் தீவிரம் அதிகமானதால் அரையாண்டு இறுதிநாள் பரிசளிப்பு வைபவத்தையும் நடாத்த முடியாத சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டோம் என்பது குறிப்பிடத்தக்கது,

இவ்வருட இறுதி அரையாண்டு ஆரம்பித்ததும் நிகழ்நிலை வகுப்புகளையே நடாத்தினோம். நவம்பர் 6ஆம் திகதி முதல்தான் நேரடி வகுப்புகள் நடாத்த அனுமதி கிடைத்தது. 2020இல் இருந்து நிகழ்நிலை வகுப்புக்களை நடாத்த வேண்டிய தேவை ஏற்பட்ட போது நாம் அதிகம் தடுமாறவில்லை. காரணம் 2019 இல் நிர்வாகக்குழுவினர் இன்றைய தொழில் நுட்ப வளர்ச்சிக்கேற்ப எமது வகுப்பறைக் கற்பித்தல் முறைகளும் அமைய வேண்டும் என்ற நவீன நோக்கில் ஆசிரியர்களுக்கு அதற்கான வளங்களையும் பயிற்சிகளையும் அளித்தனர். சில ஆசிரியர்கள் வகுப்பறைக் கற்பித்தலில் கணினிப் பயன்பாட்டை நன்கு அறிந்திருந்தனர். ஆனால் நான் அத்தகைய அறிவைப் பெற்றிருக்கவில்லை. ஆசிரியர் பட்டறைகளின் போது வேண்டிய அடிப்படைப் பயிற்சிகளைத் திரு. த. பாலவேலன், ஆசிரியர் திருமதி. அனுஷியா கண்ணன் ஆகியோர் வழங்கியிருந்தார்கள். இவ்விடத்தில் அவர்களுக்கும், நிர்வாகக் குழுவினருக்கும் நன்றி கூறிக் கொள்கிறேன். 2019 இல் தான் வகுப்பறைக் கற்பித்தலில் கணனிப் பயன்பாடு, ஜியன பயன்பாடு பற்றி அறிந்தேன். இந்த முன்னறிவு 2020, 2021 இல் நிகழ்நிலை வகுப்புகளை நடாத்தவும், நேரடி வகுப்பறைக் கற்பித்தலைத் திறன் வகுப்பறைச் சூழலில் மேற்கொள்ளவும் பேருதவியானது என்றால் மிகையாகாது. 2020 மே மாதம் முதலும், 2021 வருட ஆரம்பத்தில் இருந்தும் நி.ச.வே. சமூகமொழி பாடசாலை கூட்டமைப்பினர் இணைவழி கற்பித்தலுக்கு வேண்டிய பயிற்சிகளை பல வழிகளில் எமக்கு வழங்கினார்கள். ஒவ்வொரு மாதமும் வழங்கப்பட்ட இப்பயிற்சிகள் சிறப்பான கற்பித்தலுக்கு வழிகாட்டின.

இரண்டாம் மொழியாகத் தமிழ்மொழியைக் கற்கும் எம் மாணவர்களுக்குத் தொடர்ச்சியாகத் தமிழ் கற்றல்-கற்பித்தலை நடாத்துவதற்கு நிகழ்நிலை வகுப்புகள் வரப்பிரசாதமாக அமைந்தன. அவை மாணவர்களின் கற்றலுக்குக் பெருவாய்ப்பினை அளித்தன. வாரத்தில் ஒரு நாள் மட்டுமே நடைபெறும் தமிழ் வகுப்புகள் நிகழ்நிலை வகுப்புகளாக மாறி இணையவழி நடந்ததால் பல அனுகூலங்களைப் பெற்றோம்.

- மாணவர்கள் தொடர்ந்து தமது தமிழ்மொழி கற்றல் நடவடிக்கையை மேற்கொள்ள முடிந்தது.
- தொடர்ச்சியான கற்றலுக்கும், பாடத்திட்டத்தில் குறிப்பிட்ட அடைவுகளைக் குறிப்பிடத்தக்க அளவுக்கு மாணவர்கள் பெறுவதற்கும் உதவியது.
- மாணவர்கள் தமிழ்மொழியை மறவாது இருக்க மிகவும் உதவியானது. வாசிப்பு, பேச்சு, கேட்டுக்கிரகித்தல், எழுத்து என்று அனைத்து திறன்களையும் தொடர்ந்து பேண உதவியது.
- மாணவர்களின் தமிழ்க்கல்வியில் முறிவு ஏற்படாது தொடர்ச்சியாகக் கற்கவும் அக்கறை செலுத்தவும் உதவியது.

- வேண்டிய வேளைகளில் மேலதிக வகுப்புகளை நடாத்தவும் தனிப்பட்ட முறையில் மாணவர்களுக்கு உதவவும் ஆசிரியர்களுக்கு வாய்ப்புத் தந்தது.

நிகழ்நிலை வகுப்புகளை நடாத்தியதும் அதற்கு உதவியாக அமைந்த அம்சங்களும் போற்றுதற்கு உரியதாயினும் அவை மிகச் சாவால்கள் நிறைந்ததாகவே இருந்தன என்பதை மறுக்க முடியாது.

- இணையவழியில் இலவசமாகவே வகுப்புகளை நாம் நடத்தியதால் ஒவ்வொரு நாற்பது நிமிடத்துக்கு இணையம் துண்டிக்கப்படும். மீண்டும் இணையத் தொடர்பில் இணைய வேண்டும். தொடக்கத்தில் ஓரிரு வாரங்கள் நேரம் செலவு செய்யப்பட்டாலும் எனது மாணவர்கள் இடைநிலையினர் (13–15 வயது) என்பதாலும் தொழில்நுட்ப அறிவும் கணினி அறிவும் மிக உடையவர்கள் என்பதாலும் பிரச்சனைகளை அதிகம் சந்திக்கவில்லை.
- நிகழ்நிலை வகுப்பில் இணைவதற்கு மாணவர்கள் கணினி, மடிக்கணினி, திறன்பேசி ஆகியவற்றைப் பயன்படுத்தினர். ஒரே வீட்டில்.்.குடும்பத்தில் இருந்து இருவரோ மூவரோ ஒரே நேரத்தில் கற்றலில் இணைய வேண்டிய தேவை ஏற்படும் போது மாணவர்களும் பெற்றோர்களும் சில வசதிக் குறைபாடுகளைச் சந்தித்தனர். இணையத்தளச் சிக்கல்களையும் எதிர் கொள்ள நேரிட்டது.
- வகுப்பு மாணவர் எண்ணிக்கை அதிகமாகும் போது சிரமங்களும் அதிகமானது.
- ஒவ்வொரு மாணவர்களையும் தனித்தனி அவதானிக்க வேண்டிய தேவை ஏற்பட்டதால் கற்பித்தலுக்கு அதிக நேரம் தேவையானது.
- மாணவர்கள் கணினியிலோ திறன்பேசியிலோ இணைந்திருப்பதால் மாணவர்களின் கற்றல் அக்கறைக் குவிப்புக்குச் சவால்கள் அதிகமாக இருந்தது. மாணவர்களின் அக்கறை சிதைவடையாமல் அவர்களுக்கான கற்பித்தலை நடாத்துவதோடு மாணவர்களைக் கண்காணிதுக் கொள்ள வேண்டிய சவால் ஆசிரியர்களுக்கு இருந்தது.
- வயதில் குறைந்த சிறுவர்களை நேரடிக் கற்றல் வகுப்புப் போல நீண்டநேரம் வைத்திருப்பதில் சிரமம் உண்டானது.
- எங்களுடைய வகுப்புகளுக்கான மாதாந்த மதிப்பீடுகளை நிகழ்நிலை வகுப்பிலேயே செய்ய வேண்டிய நிலைமை உருவானது. மதிப்பீடுகளை அவ்வகையில் செய்வது சற்றுச் சிரமமே. நான்கு திறன்களையும் மதிப்பீடு செய்ய வேண்டியிருந்தது. மாணவர்கள் வேலைகளை முடித்ததும் அவற்றை எமக்கு அனுப்பி வைப்பதில் காலதாமதம் ஏற்படாமல் பார்க்க வேண்டியிருந்தது. கணினியிலோ, திறன்பேசியிலோ, இணையத்தளத்திலோ பிரச்சனை ஏற்பட்டு விட்டால் காலதாமதம் உண்டாகும். இதனால் ஒன்றிற்கு மேற்பட்ட தடவைகள் இம்மதிப்பீடுகளை நடாத்த வேண்டிய தேவை உருவானது. மாணவர்கள் எவரும் பாதிப்படையாது பார்த்துக் கொள்ள வேண்டியதும் முக்கியமாக இருந்தது. இவற்றால் மேலதிகமாக நேரம் தேவைப்பட்டது.

நிகழ்நிலை வகுப்புகள் சவால்கள் நிறைந்தாக இருந்தாலும் 80மூ மேல் திறம்பட எமது கற்றல்-கற்பித்தலை நடாத்த உதவியது என்றே சொல்லலாம். இவ்வருடம் அரையாண்டுப் பரீட்சையையும், இறுதியாண்டுப் பரீட்சையையும் நேரடி வகுப்பறையில் நடாத்த வழி கிடைத்தது. வருடாந்தப் பேச்சுப் போட்டியை நடாத்திய எமக்கு தமிழறிவுப் போட்டியை நடத்த வாய்ப்புக் கிட்டவில்லை. கலைவிழா, வாணிவிழா வாய்ப்புகளையும் இழந்துள்ளோம். ஆனாலும் கொரோனா முடக்கம் சமூகத்தில் பல புதிய மாறுதல்களைக் கொண்டு வந்து உலகளாவிய மாநாடுகள், கருத்தரங்குகள், கலந்துரையாடல்கள் என்று மாணவர்கள் பங்குபெற வாய்புகளை உருவாக்கித் தந்துள்ளது.

“உள்ளங்கையில் உலகம்” என்பது அனைத்து வழிகளிலும் நிரூபணமாகியுள்ளது. இனிவருங்காலத்தில் மாணவர்களின் கற்றல்-கற்பித்தல் கணிசமானளவு இணையவழியில் நிகழ்நிலையாக நடைபெறுமென்றும் அது தவிர்க்க முடியாததென்றும் உணர்ந்து கொண்டோம். இரண்டாம் மொழியாகத் தமிழ்மொழி கற்பித்தலில் பல படிமுறைகளைக் கடந்து முன்னேறியிருக்கிறோம். எதிர்காலச் சிறார்களுக்கு வேண்டிய விதத்திலும் வடிவிலும் கல்வியை வழங்க விருப்பத்தோடு இணைவோம்.

“வளர்க தமிழ்க்கல்வி”

**திருமதி. புவனேஸ்வரி புருஷோத்தமர்**

ஆசிரியர்

# இணையவழிக் கல்வி தான் வழியா?

இணையவழிக் கற்பித்தல் முறை தற்போதைய நாட்டு உலக சூழ் நிலையில் நடைபெற வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டுள்ளது. இக்கற்பித்தல் முறை வெறும் வகுப்பறைக் கற்பித்தல் போல் ஆசிரியர்களிடமிருந்து மாணவர் கற்கும் ஒருவழிப்பாதையாக மட்டும் இல்லாமல் பல்வழிப்பாதையாக முழுநிறைவு கொண்ட கற்பித்தல் முறை என்று கருத முடியாது.

“எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு”

“எண்ணும், எழுத்தும் மக்களுக்கு இரண்டு கண்கள்” - என கல்வியின் சிறப்பை இயம்பும் வள்ளுவனின் வாக்கின்படி ஆதியிலே சமணத்துறவிகள் தாங்கள் உறங்கும் குகையில் கல்வி போதித்தனர். சமணத்துறவிகள் உறங்கும் இடம் பள்ளிகள் என்று அழைக்கப்பட்டன. பின்னர் இதனையே நம் மூத்தக்குடிமக்கள் தங்கள் வீட்டுத் திண்ணைகளில் வைத்து கல்வி புகட்டினர். இத் திண்ணைப் பள்ளிக்கற்பித்தலே காலப்போக்கில் படிக்கும் இடம் பள்ளிக்கூடம் என்பதாயிற்று.

ஆங்கில ஆதிக்கம் வேரூன்றத் தொடங்கிய பின்னர் அந்தப் பள்ளிக்கூடங்கள் கல்வி போதிக்கும் இடங்களாக மட்டுமில்லாது, காலத்திற்கும், தேவைக்கும், அறிவியல் முன்னேற்றம் மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றத்திற்கு ஏற்ப கல்வித்துறைகளாக பல மாற்றங்கள் அடைந்து வளர்ந்துள்ளன.

தற்போதய நிர்ப்பந்தத்தில் நடைமுறையில் உள்ள இணையவழிக் கற்பித்தல் முறையில், சிறுவயது மாணவர்கள் தங்களது வகுப்பறைச் சூழலை இழப்பதென்பது மிகவும் பாதிப்பிற்குள்ளான விடயம். வகுப்பறையென்பது வெறுமனே கல்வியை மாத்திரம் கற்றுக் கொள்கின்றதொரு சூழல் அல்ல. மாணவர்களின் உளவிருத்தி மற்றும் விழுமியங்களை நடைமுறைச்சூழல் மூலம் வளர்த்துக் கொள்வதற்கான சிறந்த வாய்ப்புகளை வகுப்பறைக் கற்பித்தலால் தான் வழங்க முடியும்.

இவ்வாறான நிலையில் கடந்த ஒன்றரை வருட காலமாக சின்னஞ்சிறு மாணவர்கள் வகுப்பறைச் சூழலை மறந்தவர்களாக வீடுகளில் முடங்கிக் கிடப்பதென்பது அவர்களது கல்வியில் மாத்திரமன்றி உளநல விருத்தியிலும் பாதிப்பை ஏற்படுத்துமென்பது கவனத்தில் கொள்ளப்பட வேண்டியதாகும். “இணையவழி” கல்வியென்பது முழுமையான பலன் தரக் கூடியதல்லவென்பது இன்றைய கொரோனா காலத்தில் ஆசிரியர்களுக்கு மாத்திரமன்றி பெற்றோருக்கும் நன்கு தெரிந்து விட்டது.

ஆசிரியருடன் நேரில் தொடர்பு கொள்ளாத கற்பித்தல் முறை முழுமையான வெற்றியளிக்காதென்பது இப்போது உணரப்பட்டுள்ளது. “இணையவழி” கல்வி முறையென்பது இன்றைய கொரோனா பெருந்தொற்று காலத்தில் தவிர்க்க முடியாத தீர்வே தவிர, அதுவே நிரந்தரமாகி விடப் போவதில்லை. ஆனாலும் பாடசாலைகள் மீண்டும் ஆரம்பிக்கப்படுகின்ற வரை, இணையவழி மூலமாவது கற்பித்தல் நடவடிக்கைகளை முன்னெடுப்பதைத் தவர வேறு மார்க்கங்களும் இன்றைய நிலையில் கிடையாது.

எனவே இணையவழி கல்வி ஊடாக மாணவர்களை கல்விப் புலத்தில் வைத்திருப்பதற்கு ஆசிரியர்கள் ஒவ்வொருவரும் கடுமையாகப் பாடுபட வேண்டிய வேளை இதுவாகும். சவால்களை வெற்றி கொண்டபடியே மாணவர்களின் கல்வியை முன்னெடுக்க வேண்டிய காலம் இதுவென்பதை நாம் ஒவ்வொருவரும் கவனத்தில் கொள்வோம்.

கொரோனா தொற்றுநோயால் வீழ்ச்சியடைந்த கல்வியை மீண்டும் தூக்கி நிறுத்த, ஹோம்புஷ் தமிழ் கல்வி நிலையத்தின் அதிபர் உள்ளிட்ட நிர்வாக குழுவானது இணையவழி கல்வியை ஒரு மாற்று திட்டமாக பயன்படுத்த முடிவு செய்தது. அதன் மூலம் மாணவர்களின் நலனை மனதிலிருத்தி தமது சாதாரண கற்பித்தல் முறையில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தி மாணவர் கல்வியை தொடர வழிசமைத்தது.

“அகத்தின் அழகு முகத்தல் தெரியும்”

இயங்கலை மூலம் கற்பித்தல் முறை முழுமையான வெற்றியை தரவில்லை. கற்பித்தலின் போது மாணவர்கள் பூரணமான அறிவை விளங்கிக் கொண்டார்களா இல்லையா என்பது ஆசிரியர்கள் மனதில் கேள்விக் குறியாகவே உள்ளது. இணையவழி மூலம் கற்றலின்போது மாணவர்களுக்கு கவனச்சிதறல், தூக்கமின்மை, படைப்பாற்றல் குறை, கற்பனைத்திறன் குறைவு போன்றவை குறைவாக உள்ளது.

பெரும்பாலான மாணவர்களின் கவனிக்கும் திறன் மற்றும் கற்றல் திறன் போன்றவற்றில் இந்த இணையதள கல்வி பாதிப்புகளையும், மாற்றங்களையும் ஏற்படுத்துகிறது.

கொரோனா தொற்றுநோயால் கடந்த வருடம் மார்ச் மாதம் 12ஆம் திகதி முதல் ஹோம்புஷ் தமிழ் கல்வி நிலையம் மாற்று கல்வி செயற்பாடுகள் குறித்து கலந்துரையாடி ஆசிரியர்களுக்கான கணனி கல்வியறிவு விகிதத்தைக் கூட்டுவதற்காக பயிற்சிகளையும் வழங்கியது. இக்கற்பித்தல் முறையில் பாட வல்லுநர்களால் வடிவமைக்கப்படும் பாடங்கள் பல்லூடக வசதிகளுடன் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டன.

மாணவர்களின் கல்வியை மேம்படுத்துவதற்கான ஒரே வழி, இணையவழி கல்வி முறைமையே என்ற எண்ணத்தில் நிர்வாகக்குழுவும் அதிபரும் ஒருங்கிணைந்து செயற்பட்டமையால், இன்று ஹோம்புஷ் தமிழ் கல்வி நிலைய மாணவர்கள் இணையவழி மூலம் கல்வியினை தொடர்கிறார்கள்.

கொரோனா தொற்று காரணமாக வீட்டில் முடங்கியிருக்கும் மாணவர்களின் மன அழுத்தத்தைக் குறைப்பதற்காக மாணவர்களுக்கு Kahoot, quizzoodle போன்ற கல்வியறிவு நிகழ்ச்சிகளையும் ஆசிரியர்கள் வழங்கினார்கள்.

இணையவழி பேச்சுரைகள், அசைவுப்படக் காட்சிகள், புகைப்படங்கள், செயல்முறை விளக்கங்கள், பின்னணி இசையுடன் பாடல்களை கேட்டல், பார்வை நூல்கள்,

மூலநூல்கள் பாடத்தோடு தொடர்புடைய பிற வலைத்தளங்கள் ஆகியவற்றைப் பெறவும் இக்கற்பித்தல் முறை உதவி செய்கிறது. இவ்விதமான பல்வழிக் கற்பித்தல் முறைகளைத் தருவதாக இணையவழிக் கல்வி முறை விளங்குகிறது.

இவ்விதமான பல்வழிக் கற்பித்தல் முறைகளைத் தருவதாக இணையவழிக் கல்வி முறை விளங்குகிறது. வெளிநாட்டவர்களுக்கு மட்டும் எட்டும் கனியாக இருந்த இணையவழி தற்போது உலகலாவிய ரீதியில் கையாளப்படுகிறது. கொரோனா சூழ்நிலையில் இணையவழி பெரும் உதவியாக உள்ளது என்பதை நாம் அனைவரும் மறந்துவிடமுடியாது.

**திருமதி. மஞ்சு விஜயகுமார்**

ஆசிரியர்

# சொந்த உலகம்

இப்பரந்த உலகில் வாழும் ஒவ்வொருவருக்கும் தனியான ஓர் உலகுண்டு. ஒருவரின் அறிவு, அனுபவம், மன விருப்பங்கள் போன்ற காரணிகளால் ஒரு தனிமனிதனின் சொந்த உலகம் இன்னொருவரின் உலகைப் போன்று அமைவதில்லை.

உயர்வகுப்பில் தமிழை ஒரு பாடமாகப் பயில்பவர்கள் வாசித்தல், கேட்டல் எனும் மொழித்திறன்கள் மூலம் மூன்று கருப்பொருள்களின் கீழ் குறித்துரைக்கப்பட்ட தலைப்புகளில் அமைந்த விடயங்களை கற்று அறிந்துகொள்வர். தனிமனிதன் என்ற கருப்பொருளில் அமைந்த தலைப்புகள் மாணவர் ஒருவர் தமது சொந்த உலகை அறிந்துகொள்வதற்கு வழிவகுக்கிறது. குறிப்பாக, ஒருவரின் சொந்த விழுமியங்கள், எண்ணங்கள், அபிப்பிராயங்கள், அபிலாசைகள், பிறருடனான உறவு என்பனவற்றைப் பற்றி மாணவர்கள் எவ்வளவு தூரம் தாமே அலசி, நினைவூட்டிவருகிறார்களோ அவ்வளவுக்கு அவர்கள் தம்மைப் பற்றித் தெரிந்துகொள்கிறார்கள்.

சில மாணவர்கள் தமது எதிர்காலத் திட்டங்கள் பற்றிய எவ்வித எண்ணமும் இன்றி இருப்பர். இன்னும் சிலரோ மிக சிறிய வயதிலேயே தமது எதிர்காலம் பற்றிய ஏதோ ஒரு எண்ணப்பாட்டில் இருப்பர். வளர வளர அவர்கள் எதிர்காலக் கனவுகள் மாற்றமடைதலும் உண்டு. ஒரு மாணவரைப் போன்று இன்னொரு மாணவர் இருக்கமாட்டார். இதனால் தான் ஒவ்வொரு மாணவரும் தன்னளவில் தனித்துவமானவர் என்ற உண்மையை ஆசிரியர்கள் நினைவில் கொள்ளல் அவசியமாகிறது.


